O.S.No.281/2021, P.W.2 திரு.சிவராஜ்,16.02.2023

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1ம் பிரதிவாதி வில்லியம் ராஜை எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 கிரையப்பத்திரத்தை பத்திரத்தை யார் தயார் செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. வாதி இந்த வழக்கில் சாட்சி சொன்ன விவரம் தெரியும். வாதி சொல்லிதான் நான் சாட்சி சொல்ல வந்திருக்கிறேன். வா.சா.ஆ.1ல் உள்ள வாசகங்கள் எனக்கு தெரியாது. தாவா சொத்து மீது பல வழக்குகள் நிலுவையில் இருந்த விவரம் எனக்கு தெரியாது. நான் வள்ளியூரில் குடியிருக்கிறேன். 1ம் பிரதிவாதி கிரையப்பத்திரத்தில் கையெழுத்து போடும்போது அவருடைய வயது எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதியுடன் கிரைய பத்திரத்தில் கையெழுத்து போட யாரும் உடன்வந்தார்களா என்று எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதிக்கு சிறுநீரகத்தில் பிரச்சனை இருப்பதால் அவர் முத்திரப்பையுடன் இருப்பார் என்றால் அன்று வா.சா.ஆ.1ல் கையெழுத்து போடும்போது அவர் சுகமாக இருந்தார். 1ம் பிரதிவாதிக்கு சிறுநீரகத்தில ஏழு வருடமாக பிரச்சனை இருக்கிறது என்றும் நான் அதை தெரியாமல் அவர் சுகமாக இருந்ததாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. கிரையத்திற்கு முன்பு ஒப்பந்தம் எதுவும் இல்லை. கிரையத்திற்கு முன்பு முன்தொகை கொடுக்கப்பட்டதா என்று தெரியாது. 1ம் பிரதிவாதி வங்கி பரிவர்த்தனை முலமாக ஒரு பகுதி தொகை கொடுத்தாக வா.சா.ஆ.1 சொல்லியுள்ள விவரம் எனக்கு தெரியாது. கிரையத்தொகை ரூ.34,29,000/-. வா.சா.ஆ.1 கிரையப்பத்திரத்தில் முன்தொகை போக தான் பாக்கித்தொகை கொடுக்கிறேன் என்று வாதி என்னிடம் சொல்லவில்லை. கிரையத்தொகையை கொடுத்தாக தான் என்னிடம் சொன்னார். கிரையத்தொகைக்கு பதிலாக 2 காசோலை கொடுத்து வாதியும், 1ம் பிரதிவாதியும் சேர்ந்து ஒப்பந்தம் போட்டுக்கொண்ட விவரம் எனக்கு தெரியாது. நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்யவில்லை. வாதி, 1ம் பிரதிவாதியின் கையெழுத்து எனக்கு சரியாக தெரியாது. நான் பணத்தை நேரடியாக பார்க்கவில்லை. பையில் வைத்து வாதி 1ம் பிரதிவாதிக்கு கொடுத்துவிட்டார். 1ம் பிரதிவாதி பணம் சரியாக இருக்கிறது என்ற முறையில் தலையை ஆட்டினார். 1ம் பிரதிவாதி பணத்தை எண்ணிப்பார்த்தாரா என்று எனக்கு தெரியாது. பணம் ரூ.500 தாளா, ரூ.2000 தாளா, ரூ.100 தாளா எத்தனை கட்டு என்று எதுவும் தெரியாது. தபசு சொத்தில் வில்லங்கம் இருப்பதால் கிரையத்தொகையை பத்திர பதிவு முடிந்த பின்பு பத்திரம் வபாஸ் பெற்ற பிறகு கொடுக்கிறேன் என்று இருவரும் ஒரு ஒப்பந்தம் பிறப்பித்து வாதி

1ம் பிரதிவாதியிடம் ரூ.30,00,000/-ற்கு 1 காசோலையும், ரூ.10,00,000/- 1 காசோலையும் கொடுத்திருந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சாட்சி கையெழுத்து போட்ட ஜோசப் புரோக்காரா இருந்து இந்த கிரையத்தை முடிக்கவில்லை. பத்திரத்தை பதிவிற்கு தாக்கல் செய்த சமயம் பத்திரத்தை பதிந்து பின்பு வழக்கு இருப்பதால் அதை நிறுத்தி வைத்தார்கள். பத்திரம் பதிவு செய்யமுடியாது என சார்பதிவாளர் ஒரு உத்தரவு பிறப்பித்த விவரம் எனக்கு தெரியாது. பத்திரம் பதிவு செய்யும் சமயத்தில் எந்த பண பரிவர்த்தனையும் செய்யப்படவில்லை என்றும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி ஒப்பந்தத்தை நீதிமன்றத்தில் ஒப்புக்கொண்ட விவரம் எனக்கு தெரியாது. வாதி பத்து வருடகாலமாக என்னுடைய ஹோட்டலுக்கு சாப்பிட வருவார். நான் ஹோட்டல் நடத்தி வருகிறேன் என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என் தங்கச்சி பெயரில் தான் ஹோட்டல் உள்ளது. பத்திர பதிவு சமயத்தில் 1ம் பிரதிவாதிக்கு 86 வயது என்றால் எனக்கு தெரியாது. அவர் தனியாக வந்து பணத்தை பெற்றுக்கொண்டு எண்ணிக்கொள்ளும் அளவிற்கு அவர் உடல்நிலை இல்லை என்றால் எனக்கு தெரியாது. எனக்கும் வாதிக்கு பத்து வருடகாலம் பழக்கம் என்பதால் நான் அவருக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சாட்சியம் அளித்துள்ளபடி எந்தவிதமான பணப்பரிமாற்றமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் தாவா சொத்து சம்மந்தப்பட்ட மூல ஆவணங்களை நான் பார்க்கவில்லை. நான் தாவா சொத்தை நான் பார்த்திருக்கிறேன். தாவா சொத்து காலியிடமாக தான் இருந்தது. போன வருடம் தான் 2ம் பிரதிவாதி காம்பவுண்டு சுவர் போட்டார். தாவா சொத்தை உள்ளடக்கி 2ம் பிரதிவாதி ஏற்கனவே கிரையம் வாங்கிய விவரம் எனக்கு தெரியாது. அவர் கிரையம் வாங்கிய உடன் காம்பவுண்டு சுவர் போட்டுவிட்டார் என்றும் போன வருடம் காம்பவுண்டு சுவர் போட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2ம் பிரதிவாதி தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்படுகிறது.